Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 156 | உள்ளூர் - 05.06.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 156 | வெளியூர் - 06.06.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

அரசியலில் சிறக்க 10 பரிகாரங்கள்!

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்: 127 காலிப்பணியிடங்கள்!

விஜய் மீண்டும் டெல்லி பயணம்!

"புதிய பாதை, புதிய இயக்கம்" - அண்ணாமலை!

## குஜராத், டாமன் செல்கிறார் பிரதமர் மோடி; ரூ.21,700 கோடி வளர்ச்சித் திட்டங்களை துவக்கி வைக்கிறார்!

புதுடில்லி, ஜூன். 05–

குஜராத் மற்றும் டாமனில் ரூ.21,700 கோடி மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் மோடி இன்று துவக்கி வைக்க உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிடப்பட்ட அறிக்கையில்; குஜராத் மாநிலம் மற்றும் டாமனுக்கு அரசு முறை பயணம் மேற்கொள்ளும் பிரதமர் மோடி, போக்குவரத்து, எரிசக்தி, சுகாதாரம், உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.



பிற்பகல் 2.30 மணியளவில் குஜராத்தின் சூரத் மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அவர், சுமார் ரூ.18,800 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கிறார். அதேபோல, மும்பை – வதோதரா இடையிலான 8 வழிச்சாலையின் சில முக்கிய பகுதிகளை மக்களின் பயன்பாட்டிற்காக இன்று திறந்து வைக்கிறார்.

தொடர்ந்து, யூனியன் பிரதேசமான டாமனுக்கு செல்லும் பிரதமர் மோடி, நமோ விமான நிலையத்தின் புதிய முனையம் மற்றும் நமோ மருத்துவமனையையும் திறந்து வைக்கிறார். அங்கு நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் அவர், ரூ.2,970 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களையும் துவக்கி வைக்கிறார்.

## "புதிய பாதை, புதிய இயக்கம்" - அண்ணாமலை!

சென்னை, ஜூன். 05–

கடந்த சட்டசபை தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு பா.ஜ.க. மாநிலத்தலைவர் பொறுப்பில் இருந்து அண்ணாமலை நீக்கப்ப ட்டார். அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக, அரசியல் வட்டாரத்தில் அப்போது பரபரப்பாக பேசப்பட்டது. புதிய மாநிலத்தலைவராக பொறுப்பேற்ற நயினார் நாகேந்திரன் தலைமை யில் பா.ஜ.க. தேர்தலை சந்தித்தது. பட்டும்படாமல் தேர்தல் களத்தில் அண்ணாமலை பணியாற்றினார். அ.தி.மு.க.விடம் 27 இடங்களை கேட்டு வாங்கிய பா.ஜ.க. ஒரு தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றது.



கட்சியின் நட்சத்திர வேட்பாளர்களான மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரன், டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், வானதி சீனிவாசன் ஆகியோர் தோல்வியை தழுவினர். நாடாளுமன்ற தேர்தலில் பெற்ற 11 சதவீத வாக்கு, 2 சதவீதமாக குறைந்து போனது.

**ராஜினாமா**

இதற்கிடையே, பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம் திடீரென்று டெல்லி புறப்பட்டு சென்றார். அவர் பா.ஜ.க.வில் இருந்து ராஜினாமா செய்கிறார், புதிய கட்சியை தொடங்குகிறார் என்ற தகவல்கள் சமூக வலைத்தளத்தில் ரெக்கை கட்டி பறந்தது. அதற்கேற்ப தேசிய தலைவர் நிதின் நபினை சந்தித்து 5 பக்க கடிதத்தையும் அளித்தார். தொடர்ந்து. மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவையும், தேசிய பொதுச்செயலாளர் பி.எல்.சந்தோஷையும் அவர் சந்தித்து பேசினார். அப்போது அவர்கள் அண்ணாமலையிடம், அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம், கொஞ்சம் காத்திருக்கவும் என்று கேட்டுக்கொண்டனர்.

**பிரதமர் மோடி**

தொடர்ந்து பிரதமர் மோடியை சந்தித்து பேச அண்ணாமலை திட்டமிட்டு இருப்பதாகவும், இதற்காக அவர் டெல்லியில் முகாமிட்டு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன. இருப்பினும், அண்ணாமலை தன்னுடைய ராஜினாமா முடிவில் சற்றும் பின்வாங்க போவதில்லை என்ற உறுதியோடு இருந்ததாக சொல்லப்பட்டது.

இந்த சூழலில், மாநிலத்தலைவர் நயினார் நாகேந்திரனை உடனடியாக டெல்லி வர வேண்டும் என்று தேசிய தலைமை உத்தரவிட்டது. பா.ஜ.க.வின் அடுத்தடுத்த இந்த நிகழ்வுகள் தமிழக அரசியல் களமும், தமிழக பா.ஜனதாவும் பெரும் அதிர்வை கண்டது. அண்ணாமலை மத்திய தலைமையிடம் தெரிவித்த புகாரின் அடிப்படையிலே நயினார் நாகேந்திரன் அழைக்கப்பட்டார் என்ற தகவல் கசிந்து பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தியது.

பா.ஜ.க.வின் தலைமையை ஏற்று அண்ணாமலை மீண்டும் பா.ஜ.க.வில் தொடருவாரா? அல்லது அடுத்தகட்டமாக என்ன மாதிரியான முடிவை எடுக்கப்போகிறார்? என்ற எதிர்பார்ப்பு தமிழக அரசியல் வட்டாரத்தில் தொற்றி கொண்டு இருந்தது.

**புதுக்கட்சி**

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு புதிய தகவல் ஒன்று வெளியானது. அதில் பா.ஜ.க.வில் இருந்து விலகிய அண்ணாமலை, தனிக்கட்சி ஒன்றை புதிதாக தொடங்க இருப்பதாகவும், அது மதசார்பற்ற கொள்கை கொண்ட கட்சியாகவும், தமிழ்நாட்டை அடிப்படையாக வைத்து இயங்கக்கூடிய கட்சியாகவும் இருக்கும் என்றும், முழுக்க முழுக்க இளைஞர்களை மையப்படுத்தியே அந்த கட்சி செயல்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன. இந்நிலையில் புது கட்சி தொடர்பான அறிவிப்பை இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாரப்பூர்வமாக அறிவிக்க இருப்பதாக அண்ணாமலை தெரிவித்திருந்தார்.

அண்ணாமலையின் இந்த அதிரடி அறிவிப்பு என்னவாக இருக்கும் என்று தமிழக மக்களும் அண்ணாமலையின் தீவிர ஆதரவாளர்களும் ஆவலுடன் எதிர்ப்பார்த்து காத்துக்கொண்டிருந்தனர்.

**ராஜினாமா ஏற்பு**

இந்த சூழலில் அண்ணாமலையின் விலகலை பா.ஜ.க தலைமை இன்று உறுதி செய்தது. இதுதொடர்பாக பாஜகவின் தேசியப் பொதுச் செயலாளர் மற்றும் தலைமையகப் பொறுப்பாளர் அருண் சிங் வெளியிட்டிருந்த அறிக்கையில், "பாரதிய ஜனதா கட்சியின் தேசியத் தலைவர் நிதின் நபின் அவர்கள், தமிழக முன்னாள் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை அவர்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ததை ஏற்றுக்கொண்டார்" என்று தெரிவித்திருந்தார்.

**புதிய அரசியல், புதிய பாதை**

இந்நிலையில் பாஜக மீது கடும் குற்றம் சாட்டி அண்ணாமலை வீடியோ பதிவு ஒன்றை தற்போது வெளியிட்டுள்ளார்.

அதில், "புதிய அரசியல், புதிய பாதை, புதிய இயக்கம் இன்று முதல் தொடங்குகிறது. என்னுடைய கருத்துக்கு பாஜக தலைமை செவிசாய்க்கவில்லை. எதிர்காலத்தை நோக்கி பயணப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. எதிர்காலம் என்னை அழைத்துச் செல்லும் பாதையில் பயணிக்க வேண்டிய நேரம் இது.

ஒரு புதிய அரசியலை, அடிப்படை கட்டமைப்பை மாற்றக் கூடிய அரசியலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பாஜகவில் இருந்து ராஜினாமா செய்தேன். என்னுடைய பாதை வேறு என பாஜக மேலிடத்திடம் தெரிவித்துள்ளேன். தமிழர் பண்பு என்பதால் பாஜக மேலிடம் கூற டெல்லி வந்துள்ளேன். புதிய அரசியல் இயக்கம் என முடிவெடுத்துள்ளேன்.

அரசியலில் புதிய பாதையை உருவாக்க 17 ஆண்டுகளாக போராடுகிறேன். தேசிய கட்சிகளின் மொழி தமிழ்நாடு மக்களுக்கு புரியவில்லை. தேசிய கட்சிகள் ஒரு போதும் தமிழ்நாட்டு மக்களுக்கு புரியும் மொழியில் பேசுவதில்லை தமிழ்நாட்டு மக்களுக்கு புரியும் வகையில் பேச முடியும் என நான் கடுமையாக முயற்சி செய்து குறிப்பிட்ட அளவில் வெற்றி பெற்றேன்" என்று தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலையின் இந்த பதிவு தமிழகத்தை பரபரப்பாக்கி உள்ளது.

ஏற்கனவே தமிழக அரசியல் களத்தில் விஜய் புதுப்பாதையை வகுத்து, இளம் தலைமுறையினரின் ஏகோபத்திய ஆதரவுடன் ஆட்சி கட்டிலில் அமர்ந்து இருக்கிறார். இந்த சூழலில், ஏற்கனவே இளைஞர்கள் வட்டாரத்தை தன் பக்கம் ஈர்த்து வைத்திருந்ததோடு, தமிழக அரசியலில் புது சக்தியாகவும் உருவெடுத்து வந்த அண்ணாமலை தற்போது புதுக்கட்சியை தொடங்கி அரசியல் களத்தில் புதிய ஆட்டத்தை ஆரம்பிக்க உள்ளார்.

## கடன் வாங்கியவர்களுக்கு

# ரிசர்வ் வங்கி சொன்ன குட்நியூஸ்..!

## ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை..!!

புதுடெல்லி, ஜூன். 05–

கடன் வாங்கியுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) முக்கியமான நிம்மதி செய்தியை அறிவித்துள்ளது. ஜூன் 5, 2026 அன்று நடைபெற்ற நாணயக் கொள்கைக் குழு (MPC) கூட்டத்தில், ரெப்போ வட்டி விகிதத்தை 5.25% ஆகவே தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவு ஒருமனதாக எடுக்கப்பட்டதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.





ரெப்போ வட்டி விகிதம் என்பது வங்கிகள் ரிசர்வ் வங்கியிடமிருந்து குறுகிய காலத்திற்கு கடன் பெறும் போது செலுத்தும் வட்டி ஆகும். இந்த விகிதம் உயர்ந்தால் வீட்டு கடன், வாகன கடன், தனிநபர் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்களின் EMI அதிகரிக்கும். அதேபோல் விகிதம் குறைந்தால் EMI குறையும். தற்போது வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படாததால், பெரும்பாலானகடன்வாங்கியவர்களின் EMI தொகையில் உடனடி மாற்றம் ஏற்படாது.

சமீப காலமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வு, ரூபாயின் மதிப்பு சரிவு மற்றும் மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றம் போன்ற காரணங்களால் ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தக்கூடும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் பொருளாதார நிலைமைகளை ஆய்வு செய்த பிறகு, தற்போது விகிதத்தை மாற்றாமல் வைத்திருக்க RBI முடிவு செய்துள்ளது.

அதே நேரத்தில், நாட்டின் வளர்ச்சி குறித்த கணிப்பை RBI 6.9% இலிருந்து 6.6% ஆக குறைத்துள்ளது. மேலும், பணவீக்கக் கணிப்பை 4.6% இலிருந்து 5.1% ஆக உயர்த்தியுள்ளது. இருப்பினும் பணவீக்கம் RBI நிர்ணயித்துள்ள 2% முதல் 6% வரையிலான இலக்கு வரம்பிற்குள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூபாயை வலுப்படுத்தவும், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவும் சில கூடுதல் நடவடிக்கைகளையும் RBI அறிவித்துள்ளது. இதன் மூலம் நாட்டிற்குள் அதிக டாலர் வரத்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு வீட்டு கடன், கார் கடன் மற்றும் பிற நீண்டகால கடன்களை செலுத்தி வரும் மக்களுக்கு தற்காலிக நிம்மதியை அளித்துள்ளது. EMI உயர்வு குறித்த அச்சம் தற்போது தவிர்க்கப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் பணவீக்கம் மற்றும் உலகளாவிய பொருளாதார சூழ்நிலையைப் பொறுத்து RBI அடுத்தடுத்த முடிவுகளை எடுக்கலாம் என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

மொத்தத்தில், ஜூன் 5–ஆம் தேதி வெளியான RBI அறிவிப்பு கடன் வாங்கியவர்களுக்கு ஒரு முக்கியமான குட்நியூஸாக அமைந்துள்ளது. ரெப்போ வட்டி விகிதம் 5.25% ஆகவே தொடர்வதால், தற்போதைக்கு EMI உயர்விலிருந்து மக்கள் தப்பித்துள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய், கண்ணியமிக்க காயிதே மில்லத் 131–வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் மலர்ப்போர்வை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் என்.ஆனந்த், பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம். ஷாஜகான், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜா. முகமது பர்வேஸ், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் என். மரிய வில்சன், கேரள மாநில தொழில் துறை அமைச்சர் பி.கே. குன்ஞாலிகுட்டி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் முகமது அபுபக்கர், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.அ.அருண் தம்புராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 05.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 22-ம் தேதி

# LPG சிலிண்டர் டு விறகடுப்பு! இந்தியக் குடும்பங்களின் திடீர் மாற்றம்!




போர் பதற்றத்தின் காரணமாக விலைவாசி கடுமையாக உயர்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக LPG சிலிண்டர், பெட்ரோல், டீசல் போன்ற அனைத்தும் அதிகரித்து மாத சம்பளக்காரர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. என்னதான் விலை அதிகரித்தாலும் சிலிண்டர் என்பது ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான ஒன்று. ஆனால் கடந்த ஆண்டு மே மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மே மாதம் LPG சிலிண்டர் பயன்பாடு 19 சதவீதம் குறைந்திருப்பதாக வெளியான அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெட்ரோலியம் பிளானிங் & அனாலிசிஸ் சமீபத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் கடந்த 2025–ஆம் ஆண்டு மே மாதத்தில் உபயோகிக்கப்பட்ட சிலிண்டர்களை விட 2026–ஆம் ஆண்டு மே மாதத்தில் உபயோகிக்கப்பட்ட சிலிண்டர்கள் 19% வரை குறைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பெட்ரோல் பயன்பாடு 2.8 சதவீதம் அதிகரித்திருப்பதும், டீசல் பயன்பாடு 1 சதவீதம் அதிகரித்திருப்பதும் தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டு மே மாதத்தில் 2.62 மில்லியன் மெட்ரிக் டன் சிலிண்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு 2.12 மில்லியன் மெட்ரிக் டன் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்காசிய போரின் காரணமாக நிலவி வரும் பதற்றமான சூழலால் சிலிண்டர் சப்ளை வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் இந்த குறைவிற்கு ஒரு காரணம். அரசு தரப்பிலும் ஒரு சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே 21 நாட்களுக்கும் ஒரு முறை சிலிண்டர் முன்பதிவு செய்யும் நடைமுறை இருந்தது. ஆனால் இப்போது நகரங்களாக இருந்தால் 25 நாட்களுக்கு ஒரு முறையும், கிராமப்புறங்களாக இருந்தால் 45 நாட்களுக்கு ஒரு முறையும் முன்பதிவு செய்ய வேண்டும் என்று அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. இதனால் வழக்கமாக மக்கள் சிலிண்டர் புக் செய்த வேகம் குறைந்துவிட்டது. அதோடு சமையல் சிலிண்டர் பிரச்னையால் பல நடுத்தர குடும்பங்கள் எலக்ட்ரிக் ஸ்டவ் மற்றும் விறகடிப்பை பயன்படுத்த தொடங்கியுள்ளன.

ஒரு சில நகரங்களில் பிஎன்ஜி சப்ளையும் பெற்று வருகின்றனர். சிலிண்டர் பிரச்சனைக்கு மாற்று வழியை கண்டுபிடித்த மக்கள், பெட்ரோல், டீசல் விலை அதிகரிப்பிலும் அதன் பயன்பாட்டை நிறுத்தவில்லை. 2025–ஆம் ஆண்டு மே மாதத்தில் 3.78 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்த பெட்ரோல் பயன்பாடு 2026–ஆம் ஆண்டின் மே மாதத்தில் 2.8 சதவீதம் அதிகரித்து 3.89 மில்லியன் மெட்ரிக் டன்னை எட்டியுள்ளது. கோடை விடுமுறையும் இந்த அதிகரிப்பிற்கு காரணமாக அமைந்தது. பள்ளிகளுக்கு விடுமுறை என்பதால் பெற்றோர் குழந்தைகளை வெளியூருக்கு அழைத்துச் செல்வது, வெளியூரில் இருந்து வீட்டிற்கு அழைத்து வருவது என வாகனங்களின் பயன்பாட்டை அதிகரித்துள்ளனர்.

இன்றைய சூழலில் வீட்டிற்கு ஒரு இருசக்கர வாகனமாவது இருக்கிறது. கண்டிப்பாக அதற்கு பெட்ரோல் போட்டாக வேண்டும். இதனால்தான் ஒவ்வொரு ஆண்டும் எந்த பயன்பாட்டில் குறைவு ஏற்பட்டாலும் பெட்ரோல் டீசல் பயன்பாடு குறையவே குறையாது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 8.67 மில்லியன் மெட்ரிக் டன் டீசல் பயன்படுத்தப்பட்டுள்ளது. வழக்கமாக டீசல் பயன்பாடு ஒவ்வொரு ஆண்டும் 2 முதல் 3 சதவீதம் வரை அதிகரிக்கும். ஆனால் இந்த ஆண்டு அப்படி நடக்கவில்லை.கத்திரி வெயிலின் தாக்கமும் டீசல் பயன்பாடு குறைந்தற்கு மற்றொரு காரணமாக அமைந்துள்ளது.

# ஆனந்தம்.. பேரானந்தம்..!



அண்மையில் 31–05–26 அன்று சென்னையில் பணி நிறைவு பெற்ற நமது பேரன்புக்குரிய பன்முகத் திறன் கொண்ட இனியவர் கோ. ஏகாம்பரம். நமது கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்ற முன்னோடி, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சென்னை தலைமை அலுவலக இயக்குனரின் நேர்முக அலுவலர், கண்ணதாசன் நற்பணி மன்ற வாட்சாப் குழு உறுப்பினர் எனப் பன்முகப் பேராற்றல் மிக்க இனியவர், எழுத்தாளர் கோ. ஏகாம்பரம். 04–06–26 இன்று மாலை மனிதத்தேனீக்கு இனிப்பு மற்றும் பழங்கள் வழங்கி அன்பைப் பகிர்ந்து கொண்ட இனிய தருணம். அருகில் நமது கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்ற ஒருங்கிணைப்பாளர் தியாக தீபம் அ. பாலு உள்ளார். மாநகர் மதுரையில் எப்போதும் ஏராளமான நண்பர்கள், எழுத்தாளர்கள், மற்றும் பல்வேறு அமைப்புகளில் தனது பேரன்பைப் பகிர்ந்து கொள்ளும் மிகச் சிறந்த நண்பர் இவர். வாழிய நட்புணர்வு வாழியவே.. ஏகாம்பரம்.

# வெள்ளி விலை: தாறுமாறாக உயரப் போகுது..!




புதுடெல்லி, ஜூன். 05–

தங்கம் மற்றும் வெள்ளி கொள்முதலைக் குறைப்பதாகப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த மாதம் அறிவித்த நிலையில், மத்திய அரசு இது தொடர்பாக மற்றொரு முக்கிய முடிவை எடுத்துள்ளது. நாட்டின் வெள்ளி இறக்குமதி மீது அது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. ரூபாயின் மதிப்பு சரிந்து வருவது மற்றும் அந்நியச் செலாவணி கையிருப்பின் மீதான அழுத்தம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, வெள்ளி இறக்குமதியைக் கட்டுப்படுத்தப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வெள்ளித் துகள்கள் மற்றும் பொடிகளின் இறக்குமதி, 'கட்டுப்படுத்தப்பட்ட வகை' (controlled category) பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, இனிமேல் இவற்றை இறக்குமதி செய்வதற்கு அரசிடம் முன் அனுமதி பெற வேண்டியது கட்டாயமாகும்.

வெளிநாடுகளிலிருந்து 99.9 சதவீதம் தூய வெள்ளிப் பொடி, துகள்கள் மற்றும் பகுதி–முடிக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்யும் இந்திய இறக்குமதியாளர்கள், முதலில் 'வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகத்திடம்' (Directorate General of Foreign Trade) உரிமம் பெற வேண்டும். கடந்த மாதம், வெள்ளிப் பாளங்கள் மற்றும் பகுதி–முடிக்கப்பட்ட பொருட்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தன.. தற்போது மேலும் சில பொருட்களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. நாட்டின் வெள்ளி இறக்குமதி கணிசமாக அதிகரித்துள்ளது. உலகின் மிகப்பெரிய வெள்ளி நுகர்வோர் நாடான இந்தியா, தற்போது வெள்ளி இறக்குமதியை ஒரு சாதனை அளவை எட்டும் வகையில் மேற்கொண்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் வெள்ளி இறக்குமதிக்காக இந்தியா மொத்தம் ரூ. 1.20 லட்சம் கோடியைச் செலவிட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தில் வெள்ளி இறக்குமதி 157 சதவீதம் அதிகரித்துள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

சமீபத்தில், வெள்ளி மீதான இறக்குமதி வரியை மத்திய அரசு உயர்த்தியது. தற்போது வெள்ளித் துகள்கள் மற்றும் பொடிகள் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால், அப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்புள்ளது. இதன் காரணமாக, எதிர்காலத்தில் வெள்ளி விலை உயரக்கூடும் என்று பொருளாதார வல்லுநர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இந்த முடிவுகள் உடனடியாகவே வெள்ளி விலையை உயர்த்தக்கூடும் என்றும் அவர்கள் கூறுகின்ற னர். இறக்குமதி அனுமதி பெறுவதற்கு நீண்ட காலம் பிடிக்கும் என்பதால், இது வெள்ளியின் விநியோகத்தைக் குறைத்து, தற்காலிகத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும். இதன் விளைவாக வெள்ளி விலை உயரும் என்று அவர்கள் கணிக்கின்றனர். வெள்ளியை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் சூரிய மின்சக்தித் தகடுகள் (solar panels) மற்றும் மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் துறைகளும் இதனால் பாதிக்கப்படக்கூடும் என்று கூறப்படுகிறது. வெள்ளி என்பது நாணயங்கள், பாளங்கள் மற்றும் பூஜை பொருட்களுக்கு மட்டுமல்லாமல், பல்வேறு தொழில்துறைத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இது நாட்டின் வெள்ளித் தேவையை மேலும் அதிகரிக்கும். தற்போது, ஒரு கிலோ வெள்ளியின் விலை ரூ. 2.90 லட்சமாக உள்ளது. முன்னதாக, இதன் விலை ரூ. 4 லட்சம் வரை உயர்ந்திருந்தது.. எனினும், தற்போதைய நிலையில் வெள்ளி விலை சீராக உள்ளது.




திண்டுக்கல் மாவட்டம் பழனி ரயில் நிலையத்தில் மத்திய அரசின் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நவீன உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் ஓம் பிரகாஷ் மீனா தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் நேரில் பார்வையிட்டு இறுதி கட்ட ஆய்வு மேற்கொண்டனர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ.ஆ.மகாராசன் ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள திம்மரசநாயக்கனூர், டி.சுப்புலாபுரம், மறவபட்டி, மரிக்குண்டு, ஆசாரிபட்டி, உள்பட 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுற்றுபயணம் செய்து வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன், எம்.பி.பழனி, கோவிந்தராஜ், எஸ்.டி.சிவா அர்ச்சுணன் உள்பட கட்சி நிர்வாகிகள் உடன் சென்றனர். கிளை செயலாளர்கள் சால்வை அணிவித்து வரவேற்பு அளித்தனர்.



பழனியில் வீடற்றோர் இல்லத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 103 வது பிறந்த நாளையொட்டி நகர திமுக சார்பில் அன்னதான விருந்து வழங்கப்பட்டது. இதில் நகர செயலாளர் வேலுமணி, துணை செயலாளர் சக்திவேல், கவுன்சிலர்கள் கே சுரேஷ், இந்திரா திருநாவுக்கரசு, மற்றும் அழகேசன், மனோகரன், மாவடியான், மாரிமுத்து ஆகியோர் உள்ளனர்.

# திருப்பூர் மாநகர மாவட்ட அமமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!



திருப்பூர், ஜூன் 05–

அம்மா மக்கள் முன்னேற்ற கழக திருப்பூர் மாநகர் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் புல்லட் ரவி தலைமை தாங்கினார் மாநில சிறுபான்மை அணி துணைச் செயலாளர் ஜான் வரவேற்று பேசினார் மாநகர் மாவட்ட செயலாளர் இறை ஆர் வெங்கடேஷ் சிறப்புரையாற்றினார் மேலும் பேசிய அவர் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை ஓம் சக்தி சாலையில் உள்ள தனியார் திருமண மஹாலில் புதிய நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மற்றும் அறிமுக கூட்டம் நடைபெற உள்ளதாகவும் இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் உடுமலை சண்முகவேலு கலந்து கொண்டு சிறப்பிக்க இருப்பதாக தகவல் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாநகர் மாவட்ட நிர்வாகிகள் 50–க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர் ...



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட உடையமுத்தூர் ஊராட்சி, இரகுபதியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், மாணவ, மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சியர் திரு.கு.ரவிகுமார் பார்வையிட்டார்.




தேனி மாவட்டம் பெரியகுளம் தாலுகா வட கரை பகுதியில் நீர்வளத்துறையின் சார்பில் வராகநதியுடன் கல்லாறு இணையும் ஆற்றில் இருந்து சத்யாநகர் பாலம்வரை வராகநதி ஆற்றில் சிறப்பு தூர்வாரும் பணிகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் ஆய்வு செய்தார்.

# மதுரையில் மறைந்த எஸ்.பி.பாலசுப்பிரமணியன் 80-வது பிறந்த கொண்டாட்டம்!



மதுரை, ஜூன். 05–

இசை மேதை மறைந்த எஸ்.பி. பாலசுப்பிரமணியன் அவர்களின் 80வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை எஸ் எஸ்* காலனி பகுதியில் உள்ள ஸ்ரீ மகா பெரியவா கோவிலில் வைத்து அனுஷத்தின் அனுக்கிரகம் அமைப்பின் தலைவர் நெல்லை பாலு, கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்க தலைவர் முனைவர் ஜெகதீசன், செயலாளர் ஸ்ரீ தர். சத்தியம் செந்தில் மற்றும் உறுப்பினர்கள் அவரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இசை உலகின் "பாடும் நிலா" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் (SPB) அவர்கள் பாடிய இதயம் ஒரு கோவில் அதில் உதயம் ஒரு பாடல் என்ற பாடலை பாடகர் ஜோசப் பாடினார். முன்னதாக குருவாரத்தை முன்னிட்டு மகா பெரியவர் விக்ரகம் மற்றும் வெள்ளி பாதுகைக்கு பால் பன்னீர் திரவியம் நெய் இளநீர் விபூதி உள்ளிட்ட பல்வேறு அபிஷேகங்கள் நடைபெற்றது. அதை தொடர்ந்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஏராளமனோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை அனுஷத்தின் அனுக்கிரகம் நிறுவனர் நெல்லை பாலு செய்திருந்தார்.



# அரசியலில் சிறக்க 10 பரிகாரங்கள்!




1. சூரிய பகவான் வழிபாடு தினமும் காலை சூரிய நமஸ்காரம் செய்து வழிபடுவது தலைமைத்துவ திறனை அதிகரிக்கும் என நம்பப்படுகிறது.
2. ஆஞ்சநேயர் தரிசனம் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயரை வழிபடுவது தைரியத்தையும் மக்கள் செல்வாக்கையும் உயர்த்தும்.
3. முருகப்பெருமான் வழிபாடு எதிரிகளை வெல்லவும், புகழ் பெறவும் உதவும் என பக்தர்கள் நம்புகின்றனர்.
4. குலதெய்வ வழிபாடு குடும்பத்தின் குலதெய்வத்தை தொடர்ந்து வழிபடுவது தடைகளை நீக்கும் என்று கூறப்படுகிறது.
5. சனீஸ்வரன் அர்ச்சனை சனிக்கிழமைகளில் எள் தீபம் ஏற்றி வழிபடுவது அரசியல் தடைகளை குறைக்க உதவும்.
6. அன்னதானம் செய்தல் ஏழை, எளிய மக்களுக்கு உணவு வழங்குவது மக்கள் ஆதரவை அதிகரிக்கும் என நம்பிக்கை.
7. மரக்கன்று நடுதல் சமூக நலனுக்காக மரக்கன்றுகள் நடுவது நல்ல பலன்களைத் தரும்.
8. கோவில் உழவாரப் பணி கோவில் சுத்தம் மற்றும் சேவைகளில் ஈடுபடுவது புண்ணியத்தை அதிகரிக்கும்.
9. நவக்கிரக வழிபாடு கிரக தோஷங்கள் நீங்கி முன்னேற்றம் கிடைக்கும் என ஜோதிடர்கள் கூறுகின்றனர்.
10. மக்கள் சேவை ஏழை மக்களுக்கு உதவி, கல்வி உதவி, மருத்துவ உதவி போன்ற சேவைகள் அரசியலில் நிலையான வளர்ச்சிக்கு அடிப்படையாக கருதப்படுகின்றன.

குறிப்பு: இவை ஆன்மிக மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளின் அடிப்படையிலான பரிகாரங்கள் மட்டுமே. அரசியலில் வெற்றி பெறுவதற்கு மக்கள் சேவை, நேர்மை, உழைப்பு மற்றும் தலைமைத்துவ திறன் ஆகியவை மிகவும் முக்கியமானவை.

## சினிமா துளிகள்..!

# 'ஜெயிலர் 2' படத்தின் ரிலீஸ் எப்போது?



நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் கடந்த 2023–ம் ஆண்டு திரையரங்குகளில் வெளியான படம் 'ஜெயிலர்'. இந்தப் படத்தில் ரம்யா கிருஷ்ணன், மிர்ணா, விநாயகன், வசந்த் ரவி உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். சன் பிக்சர்ஸ் தயாரித்த இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்திருந்தார். இந்தப் படம் ரூ.600 கோடி வரை வசூலித்து மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

இந்த படத்தின் வெற்றியைத் தொடர்ந்து தற்போது 'ஜெயிலர் 2' திரைப்படம் உருவாகி வருகிறது. மீண்டும் ரஜினி – நெல்சன் கூட்டணி இணைந்துள்ளதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. முதல் பாகத்தை போலவே இந்த படத்திலும் மோகன்லால், சிவராஜ்குமார் ஆகியோர் முக்கிய கேமியோ கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும் ரம்யா கிருஷ்ணன், பாலிவுட் நடிகர் மிதுன் சக்கரவர்த்தி, சந்தானம், சுராஜ் வெஞ்சரமூடு, யோகி பாபு உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர்.

படப்பிடிப்பு பணிகள் அண்மையில் நிறைவடைந்த நிலையில், தற்போது பின்னணி இசை, காட்சித் தொகுப்பு மற்றும் இறுதிக்கட்ட பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. முன்னதாக இந்த திரைப்படம் செப்டம்பர் 3–ஆம் தேதி வெளியாகும் என்று தகவல்கள் வெளியானது. ஆனால் தற்போது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நவம்பர் 8–ஆம் தேதி வெளியிடுவது குறித்தும் படக்குழு ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது. ரஜினிகாந்த் திரைப்படங்கள் பண்டிகைக் காலங்களில் வெளியாகும்போது ரசிகர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெறுவது வழக்கம். இதனால் செப்டம்பர் வெளியீட்டா அல்லது தீபாவளி வெளியீட்டா என்பது குறித்து இறுதி முடிவை படக்குழு விரைவில் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஜெயிலர் 2 திரைப்படத்தின் வெளியீட்டு அறிவிப்புக்காக ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.




## கர்ப்பிணிப் பெண்களுக்கு எச்சரிக்கை மணி..!




நகர்ப்புறங்களில் உள்ள மாசுகள் கருப்பையின் பாதுகாப்புத் தடையைத் தாண்டி, கருவின் வளர்ச்சியை எவ்வாறு சேதப்படுத்துகின்றன என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த முக்கிய ஆய்வில், காற்று மாசுபாட்டில் உள்ள நுண்ணிய தூசுத் துகள்கள் (PM2.5 மற்றும் PM10) கருப்பைக்குள் நுழைந்து கடுமையான அழற்சியை ஏற்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இது, கருவின் வளர்ச்சிக்கு அவசியமான IGFBP3 எனப்படும் ஒரு முக்கியப் புரதத்தைச் செயலிழக்கச் செய்கிறது. இந்தப் புரதத்தின் பற்றாக்குறை, கருப்பையில் கருவின் வளர்ச்சியை மெதுவாக்குகிறது. இந்த விளைவு, குழந்தை பிறந்த பிறகும், அதன் குழந்தைப் பருவம் வரையிலும் தொடரக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்த ஆய்விற்காக, அதிக மாசுபாடு உள்ள டெல்லி மற்றும் குறைந்த மாசுபாடு உள்ள ஜார்க்கண்டின் தியோகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த 994 கர்ப்பிணிப் பெண்களின் பிறப்புப் பதிவுகளும், எலிகள் மீதான சோதனைகளும் ஆய்வு செய்யப்பட்டன. டெல்லி போன்ற நகரங்களில் வசிக்கும் கர்ப்பிணிப் பெண்கள் PM2.5 மாசுபாட்டிற்கு ஆளாவது, குறைந்த எடையுள்ள குழந்தைகள் பிறப்பதற்கான குறிப்பிடத்தக்க அதிக அபாயத்துடன் தொடர்புடையது என்று கண்டறியப்பட்டது.

மாசுபாடு அதிகரிக்கும்போது, கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் ஒரு அபாயகரமான உயர் இரத்த அழுத்தமான ப்ரீக்ளாம்ப்சியாவின் ஆபத்து கணிசமாக அதிகரிக்கிறது. இது குறைப்பிரசவங்களுக்கு வழிவகுக்கும். டெல்லியின் காற்று மாசுபாட்டிற்கு உள்ளாக்கப்பட்ட கர்ப்பிணி எலிகள் மீது நடத்தப்பட்ட சோதனைகள், கவலைக்கிடமான முடிவுகளைத் தந்துள்ளன.

அந்த எலிக் குட்டிகளின் உடல் அளவு 25% வரை குறைந்துள்ளது. பிறந்த குட்டிகளின் எடை 34% வரை குறைவாகப் பதிவாகியுள்ளது. பிறக்காத குழந்தைகளிடம் நரம்பியல் பலவீனம், கை-கால் அசைவுகளில் ஒருங்கிணைப்பு இல்லாமை, கடுமையான பதட்டம் மற்றும் மன அழுத்தம் போன்ற அறிகுறிகள் காணப்பட்டன.

மாசுபாட்டிலிருந்து தங்களையும் தங்கள் பிறக்காத குழந்தையையும் பாதுகாக்க, கர்ப்பிணிப் பெண்கள் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் பரிந்துரைக்கின்றனர். அவர்கள் வெளியே செல்லும்போது தரமான முகக்கவசங்களை அணிய வேண்டும். உடலில் உள்ள மாசு நச்சுக்களை எதிர்த்துப் போராட, ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்த உணவுகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கர்ப்பிணிப் பெண்களுக்கான மருத்துவப் பரிசோதனைகளின் ஒரு பகுதியாக மாசு கண்காணிப்பையும் சேர்க்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். குறைந்த நுண்ணறிவு, இதய நோய், புற்றுநோய் மற்றும் வளர்சிதை மாற்ற நோய்கள் உட்பட, இந்த மாசுபாட்டின் தாக்கம் அடுத்த தலைமுறையினரிடம் எவ்வாறு இருக்கும் என்பது குறித்து வரும் நாட்களில் மேலும் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

# ரூ.2,500 கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலம் - தமிழக அரசு அறிவிப்பு!



சென்னை, ஜூன் 05–

ரூ.2,500 கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய இருப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:–

தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 2,500 கோடி மதிப்புள்ள பங்குகள் வடிவிலான 7.69 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2033 ரூபாய் 1,000 கோடி மறுவெளியீடு, 7.74 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2036 ரூபாய் 1,000 கோடி மறுவெளியீடு மற்றும் 7.80 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2041 ரூபாய் 500 கோடி மறுவெளியீடு ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் ஜூன் 9, 2026 அன்று நடத்தப்படும். போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E–Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) ஜூன் 09, 2026 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுபிரியர்ளுக்கு ஷாக் நியூஸ்.. டாஸ்மாக்கில் அதிரடி!




சென்னை, ஜூன். 05–

தமிழகத்தில் புதிய அரசு அமைந்த பிறகு டாஸ்மாக் நிர்வாகத்தில் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஊழியர்களின் தொடர் போராட்டங்கள் மற்றும் கூடுதல் கட்டண முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, டாஸ்மாக் கடைகளைத் தனியார்மயமாக்க அரசு ஆலோசித்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் 717 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து, தமிழக டாஸ்மாக் நிர்வாகத்தில் அடுத்தகட்டமாகப் பெரும் சீர்திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகத் தகவல் கசிந்துள்ளது. ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை, பணிச்சுமை மற்றும் மதுபான கூடுதல் விலை விவகாரங்களுக்குத் தீர்வாகப் பார்கள் மற்றும் கடைகளைத் தனியார்மயமாக்க அரசு திட்டமிட்டு வருவதாகக் கூறப்படுகிறது. ஜூன் 30–ல் தற்போதைய பார் டெண்டர்கள் முடிவடையும் நிலையில், புதிய நெறிமுறைகள் மற்றும் அதிகாரிகள் அதிரடி இடமாற்றத்துடன் இந்த மாற்றங்கள் அரங்கேற வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, டாஸ்மாக் நிர்வாகத்தில் அடுத்தடுத்து பல்வேறு அதிரடி சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் விஜய் அவர்களின் உத்தரவின்படி, முதற்கட்டமாகப் பள்ளிகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பேருந்து நிலையங்களுக்கு அருகில் பொதுமக்களுக்கு இடையூறாக இருந்த 717 டாஸ்மாக் கடைகளை மூட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, டாஸ்மாக் சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பார்களை (Bars) முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தனியார் வசம் ஒப்படைப்பது (தனியார்மயம் ஆக்குவது) குறித்து அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**தனியார்மயமாக்கல் ஆலோசனையின் பின்னணி:**

இந்தத் தகவல்கள் இன்னும் அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்படவில்லை என்றாலும், அரசியல் மற்றும் பொருளாதார நிபுணர்கள் இதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகக் கருதுகின்றனர். இதற்கு டாஸ்மாக் நிர்வாகத்தில் நீண்டகாலமாக நீடித்து வரும் சில முக்கியப் பிரச்சினைகளே காரணம் என்று கூறப்படுகிறது:

ஊழியர்களின் தொடர் போராட்டங்கள்: கடுமையான பணிச்சுமை, காலிப் பாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டத்தில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் அண்டை மாநிலங்களை விடக் குறைவான ஊதியம் போன்ற காரணங்களால் டாஸ்மாக் ஊழியர் சங்கங்கள் அடிக்கடி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

**கூடுதல் கட்டண முறைகேடு:**

மதுபானங்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட (MRP) கூடுதல் தொகை வசூலிக்கப்படும் புகார்கள் தொடர்ந்து வருகின்றன. கடை வாடகை மற்றும் மின்சாரக் கட்டணத்தைச் சமாளிக்கவே இந்த கூடுதல் தொகை பெறப்படுவதாகத் தொழிற்சங்கங்கள் தரப்பில் கூறப்பட்டாலும், அரசின் கடுமையான நடவடிக்கையாலும் இந்த முறைகேட்டை முழுமையாகத் தடுக்க முடியவில்லை. இதனால், இதைத் தனியார் வசம் ஒப்படைத்தால் நிர்வாகச் சுமை குறையும் என அரசு கருதுவதாகத் தெரிகிறது.

**ஜூன் 30–ல் வரவிருக்கும் புதிய மாற்றங்கள்:**

தற்போதுள்ள பார் டெண்டர்கள் அனைத்தும் வரும் ஜூன் 30–ஆம் தேதியுடன் முடிவடைய உள்ளன. இதைப் பயன்படுத்தி, டாஸ்மாக் நிர்வாக நெறிமுறைகளை முழுமையாகச் சீரமைக்கவும், புதிய விதிமுறைகளுடன் கூடிய டெண்டர்களை ஒதுக்கீடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், டாஸ்மாக்கின் முக்கிய உயர் அதிகாரிகளைப் பணியிட மாற்றம் செய்ய அரசு முடிவு செய்துள்ளதாகவும், காலிப் பாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டத்தைப் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாத வகையில் எளிமைப்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# முதல்வர் விஜய்க்கு பதிலடி கொடுக்க கனிமொழியை களமிறக்கும் தி.மு.க.!



சென்னை, ஜூன். 05–

முதல்வர் விஜய்க்கு பதிலடி கொடுக்கும் வேலையை, தி.மு.க., துணை பொதுச்செயலர் கனிமொழியிடம் ஒப்படைக்க, தி.மு.க., தலைவர் ஸ்டாலின் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சட்டசபை தேர்தலில் ஏற்பட்ட தோல்வி, தி.மு.க.,வினரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. ஆட்சியை மட்டுமின்றி, கொள்கை கூட்டணி, நிரந்தர கூட்டணி என்று, ஸ்டாலின் பெருமை பேசி வந்த கூட்டணியையும், தமிழக வெற்றிக் கழகத்திடம் தி.மு.க., இழந்துள்ளது.

கடந்த, 1ம் தேதி திருச்சியில் நடந்த கூட்டத்தில் பேசிய முதல்வர் விஜய், தி.மு.க.,வை தீய சக்தி, தூர்ந்து போன சக்தி என, கடுமையாக விமர்சித்தார். இதற்கு, தி.மு.க., துணை பொதுச்செயலர் ஆ.ராஜா, அமைப்பு செயலர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் பதிலடி கொடுத்தனர்; இது எடுபடவில்லை.

த.வெ.க., ஆட்சிக்கு வந்து, ஒரு மாதம் கூட ஆகாத நிலையில், வேண்டுமென்றே பழி சுமத்துவதாக, சமூக வலைதளங்களில் த.வெ.க.,வினர் எதிர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

த.வெ.க.,வுக்கு பதிலடி கொடுக்க, கடந்த, 30ம் தேதி, தி.மு.க., தலைமை அலுவலகமான அறிவாலயத்தில் நடந்த, இளம் தலைமுறையினருக்கான, 'ஜென் சி' தி.மு.க., கூட்டமும், சமூக வலைதளங்களில் கேலி கிண்டலுக்கு உள்ளானது.

இந்நிலையில், த.வெ.க., அரசையும், முதல்வர் விஜயையும், தி.மு.க., துணை பொதுச்செயலர் கனிமொழியை வைத்து விமர்சிக்க, ஸ்டாலின் முடிவு செய்து உள்ளதாக, அக்கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

பாலியல் வன்கொடுமை சம்பவங்களை கண்டித்து, கனிமொழி தெரிவித்த கருத்துக்கு, பெண்களிடம் வரவேற்பு இருந்ததால், இந்த முடிவுக்கு ஸ்டாலின் வந்திருப்பதாக கூறப்படுகிறது.

சமீபத்தில், கனிமொழியை சந்தித்த எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி, 'முதல்வர் விஜய் தலைமையிலான அரசின் தவறுகளை, உடனுக்குடன் விமர்சிக்க வேண்டும். 'தி.மு.க., மீதும், முந்தைய தி.மு.க., அரசின் மீதும் வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு, உடனடியாக பதிலடி கொடுக்க வேண்டும்' என வலியுறுத்தியுள்ளதாக, தி.மு.க., நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

# தமிழகத்தில் 7 ஆயிரம் பெட்ரோல் பங்குகள் வேலை நிறுத்தம்?

சென்னை, ஜூன். 05–

தமிழ்நாடு பெட்ரோல், டீசல் விற்பனையாளர்கள் சங்க தலைவர் கே.பி.முரளி வெளி



யிட்டுள்ள அறிக்கையில்,

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தாலுகா கீழ அரசரடியில் உள்ள பெட்ரோல் பங்கில் கடந்த மே 30–ந்தேதி எரிபொருள் நிரப்புவது போல் வந்த கும்பல், கொடிய ஆயுதங்களை ஏந்தி வன்முறையில் ஈடுபட்டனர். அப்போது. ஊழியர் ஒருவரை அரிவாளால் தலையில் காயப்படுத்தியதுடன், விற்பனை நிலையத்தையும் சேதப்படுத்தி விட்டு தப்பியோடிவிட்டனர்.

இது ஒரு சாதாரண சட்டம்–ஒழுங்கு பிரச்சினை இல்லை. இந்த செயல் எங்கள் ஊழியர்களை மட்டுமல்ல, அங்கு வரும் பொதுமக்களின் உயிரையும் கடுமையான ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது. தமிழக அரசுக்கு பெட்ரோல் பங்குகள் மூலம் ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் கோடி வரிவருவாய் கிடைக்கிறது.

எனவே குற்றவாளிகளை குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்து, போதைப்பொருள் பின்னணி விசாரணை நடத்துவதுடன், பிரத்யோக பாதுகாப்புச் சட்டம் இயற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் தமிழகத்தில் உள்ள 7 ஆயிரம் பெட்ரோல் பங்குகளும் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும் என கூறப்பட்டுள்ளது.





மதுரை வழக்கறிஞர் சங்கம் ஜாக் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம். மதுரை வழக்கறிஞர் சங்கம் ஜாக் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம்.இவன்மோகன்தாஸ் ,இப்ராகிம், ராஜாராம்,பெருமாள் வழக்கறிஞர்கள்.

# கோயில்களில் முறைகேடுகள்; முடிவு கட்ட தமிழக அரசு தீவிரம்!



கோவை, ஜூன். 05–

திருச்செந்தூரில் அதிரடியாக செயல்பட்டு மூவரை அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் பணி நீக்கம் செய்ததை தொடர்ந்து கோவையிலுள்ள அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் உஷாராகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆன்மீக சுற்றுலா மையமாக கோவையில் மருதமலை சுப்ரமணியசுவாமி, காரமடை அரங்கநாதசுவாமி, மேட்டுப்பாளையம் வனபத்ரகாளியம்மன் மதுக்கரை தர்மலிங்கேஸ்வரர், தடாகம் அனுவாவிசுப்ரமணியர், பூண்டி வெள்ளிங்கிரியாண்டவர் என்று ஏராளமான கோயில்கள் கோவையில் உள்ளன.

இங்கு நாள்தோறும் பல ஆயிரக்கணக்கான மக்கள் சுவாமி தரிசனத்துக்கு செல்கின்றனர். சுவாமியை எளிதாக தரிசிக்க பக்தர்களிடம் கணிசமான பணம் கறக்கப்படுகிறது. இதற்கென்று ஏராளமான புரோக்கர்கள் இருக்கின்றனர். த.வெ.க. அரசு இதற்கு முடிவுகட்ட விரும்புகிறது. பணியாளர்களை மிகுந்த எச்சரிக்கையுடன் வேலை செய்யும்படி சென்னையில் இருந்து போனில் அழைத்து அறிவுறுத்தி வருகின்றனர்.

பேரூர் பட்டீசுவரர், மருதமலை சுப்ரமணிய சுவாமி, காரமடை அரங்கநாதசுவாமி கோயில்களில் அறிவிப்பு பலகை பிரதானமான இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. "பக்தர்கள் எந்த குறை இருந்தாலும் இந்து சமய அறநிலையத்துறை தலைமை அலுவலகம் நுங்கம்பாக்கம் சென்னை என்ற முகவரிக்கு அனுப்பலாம். கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 –425– 1757 ல் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்" என அதில் கூறப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) 127 காலிப்பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: TNSRLM தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்
மொத்தப் பணியிடங்களின் எண்ணிக்கை: 127 சமூக வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடங்கள்
பணியிட மாற்றம்: மதுரை
தொடங்கும் தேதி: 01.06.2026
கடைசி தேதி: 07.06.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://Madurai.nic.in/

# ஜூன் 21 அன்று விண்வெளியில் நடக்கப்போகும் அற்புதம்?



ஜூன் 21 அன்று, சூரியன் வானில் வழக்கத்தை விட அதிக நேரம் உலா வரவுள்ளது. இந்தியா உள்ளிட்ட வட அரைக்கோளத்தில் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு, 2026–ம் ஆண்டின் மற்ற அனைத்து நாட்களையும் விட அன்றைய தினமே மிக நீண்ட பகல் பொழுதைக் கொண்ட நாளாக அமையவிருக்கிறது. அன்று சூரிய உதயம் மிக அதிகாலையிலேயே நிகழ்ந்துவிடும்; சூரிய அஸ்தமனம் வழக்கத்தை விட மிகவும் தாமதமாக இருக்கும். இதனால், இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட இரவோ இந்த ஆண்டின் மிகக் குறுகிய இரவாக மாறும். சரி, விண்வெளியில் உண்மையில் என்ன நடக்கிறது? குறிப்பிட்ட நாள் மட்டும் மற்ற நாட்களை விட ஏன் இவ்வளவு நீளமாக இருக்கிறது?

இந்த வானியல் நிகழ்வு ஆங்கிலத்தில் 'ஜூன் சோல்ஸ்டிஸ்' (June Solstice) என்றழைக்கப்படுகிறது. வட அரைக்கோளம் அதிகப்படியான சூரியக் கதிர்வீச்சை பெறும் நாளாக இது கருதப்படுகிறது. இந்த ஆண்டின் மிக நீண்ட நாளான இந்நிகழ்வு, சரியாக 21 ஜூன் 2026, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4:24 மணிக்கு (EDT – கிழக்கு பகல்நேர நேரம்) நிகழவுள்ளது.

பூமியைச் சூரியனைச் சுற்றி வலம் வரும் ஒரு சுழலும் பம்பரமாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். பூமி நேராக நிமிர்ந்து நிற்காமல், தன் அச்சில் சுமார் 23.5 டிகிரி சாய்ந்துள்ளது. இந்தச் சாய்வுதான் ஒரு வருட காலத்தில் பூமியின் பல்வேறு பகுதிகளில் சூரிய ஒளி விழும் விதத்தைத் தீர்மானிக்கிறது. ஜூன் 21 அன்று, பூமி சூரியனை நோக்கி அதிகபட்சமாகச் சாய்ந்திருக்கும். இதன் விளைவாக, சூரியன் வானில் மிக உயரமான மற்றும் மிக நீண்ட பாதையில் பயணிக்கிறது. இதனால் பகல் பொழுதின் நீளம் அதிகரித்து, இரவுப் பொழுது மிகக் குறுகியதாக மாறுகிறது. இந்த அயர்னகால நிகழ்வின்போது, சூரியன் கடக ரேகை மற்றும் மகர ரேகைக்கு நேர் மேலே இருக்கும். இதனால் பூமியின் வடக்குப் பகுதியை நோக்கியுள்ள பிராந்தியங்களில் சூரிய ஒளியும், சூரிய ஆற்றலும் பெருமளவில் கிடைக்கின்றன.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# பிரதமர் மோடியுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும்; அதிபர் டிரம்ப்!

வாஷிங்டன், ஜூன். 05–

பிரதமர் மோடியை ஒரு நல்ல நண்பர் என்று வர்ணித்த அமெரிக்க அதிபர் டிரம்ப், இந்தியாவும், அமெரிக்காவும் விரைவில் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை எட்டும் என தெரிவித்தார்.

60 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் கட்டாய உழைப்பின் மூலம் தயாரிக்கப் படுகின்றன என்று விசாரணைகள் வெளிப்படுத்தி உள்ளதாகக் கூறி, 12.5 சதவீதம் கூடுதல் சுங்க வரியையும் அமெரிக்கா அறிவித்தது. இந்நிலையில் வெள்ளை மாளிகையில் நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது:



பல ஆண்டுகளாக, இந்தியா அமெரிக்காவைச் சுரண்டி வந்தது. அவர்கள் எங்கள் மீது பெரும் வரிகளை விதித்துவிட்டு, எதையும் செலுத்தவில்லை. இப்போது நிலைமை தலைகீழாக மாறி, நாங்கள் இந்தியாவுடன் இணைந்து நிறைய பணம் சம்பாதிக்கிறோம்.

ஆனால் இந்தியாவும், அமெரிக்காவும் விரைவில் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை எட்டும், ஏனென்றால் பிரதமர் நரேந்திர மோடியை எனக்கு மிகவும் பிடிக்கும்; அவர் எனது நல்ல நண்பர், நாங்கள் நன்றாகப் பழகுகிறோம். எங்களுக்குள் ஒரு நல்ல உறவு இருக்கிறது.

ஈரானிடம் கடற்படையும் இல்லை, விமானப்படையும் இல்லை, நாங்கள் அவர்களின் தலைமையை அழித்து விட்டோம். பிறகு, அவர்கள் போரில் மிகவும் சிறப்பாகச் செயல்படுவதாகப் போலிச் செய்திகளில் படிக்கிறீர்கள்.

இது நம்பமுடியாதது. அவர்களிடம் 159 கப்பல்கள் உள்ளன, அவை அனைத்தும் கடலின் அடியில் கிடக்கின்றன, நாங்கள் அங்கு அவற்றைப் புகைப்படம் எடுத்துள்ளோம். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறினார்.

# அரசுப் பத்திரங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு முழு வரி விலக்கு! மத்திய அரசு!!

புதுடெல்லி, ஜூன். 05–

அரசு கடன் பத்திர சந்தையில் இருந்து கணிசமான அன்னிய முதலீடுகள் வெளியேறிய நிலையில், மீண்டும் முதலீடுகளை ஈர்க்க வரி விலக்கு அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. கடந்த ஜூன் 3ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில், இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**விபரங்கள்**

அரசு பத்திரங்கள், மாநில வளர்ச்சி கடன் பத்திரங்கள் போன்றவற்றில்



அன்னிய முதலீட்டாளர்களுக்கு 12.50 சதவீத நீண்டகால மூலதன ஆதாய வரி விதிக்கப்படுகிறது. மற்ற முன்னணி சந்தைகளை ஒப்பிட்டால், இது அதிகம்

அதிக வரியே முதலீட்டுக்கு ஒரு தடையாக இருப்பதாக அன்னிய முதலீட்டாளர்கள் தொடர்ந்து அதிருப்தி தெரிவித்தனர்

சமீபத்தில் ஏராளமான அன்னிய முதலீடுகள் பத்திர சந்தையை விட்டு வெளியேறின

எனவே, கடன் பத்திர முதலீட்டுக்கு அன்னிய முதலீட்டாளர்கள் மீது விதிக்கப்படும் மூலதன ஆதாய வரியை நீக்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதை வேகமாக அமல்படுத்துவதற்காக, நாடாளுமன்ற அமர்வுக்காக காத்திருக்காமல், அவசர சட்டம் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# பிரதமர் மோடிக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிப்பதில் பலனில்லை; ரஷ்ய அதிபர் புடின்!


வாஷிங்டன், ஜூன் 05–

இந்தியா– அமெரிக்கா உறவுகள் ரஷ்யாவுடனான உறவுகளை பாதிக்காது; பிரதமர் மோடிக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிப்பதில் பலனில்லை என ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: வேறு எந்த நாட்டுடனும் இந்தியா கொண்டுள்ள இருதரப்பு உறவுகளால் எந்தவிதமான பாதகமான விளைவுகள் ரஷ்யாவுக்கு ஏற்படவில்லை. இந்தியா ஒரு நம்பகமான கூட்டாளி. இந்தியா உலகின் முக்கியப் பொருளாதாரங்களில் ஒன்றாகத் திகழ்வதோடு, தற்போது வலுவான பொருளாதார வளர்ச்சியையும் கண்டு வருகிறது.

வரும் ஆண்டுகளில் இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் தொடர்ந்து கணிசமாக விரிவடையும். இருதரப்பு வர்த்தகம் 100 பில்லியன் டாலரை எட்டும் என்பதில் நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். இந்தியா– அமெரிக்கா உறவுகள் ரஷ்யாவுடனான உறவுகளை பாதிக்காது. பிரதமர் மோடிக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிப்பதில் பலனில்லை. இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ உறவுகளில் எங்களுக்கு எந்தப் பிரச்னைகளும் இல்லை.

மேம்பட்ட ஆயுதங்கள் சார்ந்த விஷயங்களில் நாங்கள் இந்தியாவுக்கு



ஒத்துழைப்பு வழங்குகிறோம். அவர்கள் தரை மற்றும் கடல் தளங்களில் இருந்து ஏவக்கூடிய பிரம்மோஸ் ஏவுகணைகளைத் தயாரித்துள்ளனர். Su–57 போர் விமானத்தைப் பொறுத்தவரை, இந்தத் தொழில்நுட்பத்தில் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று நாங்கள் எங்கள் இந்திய நண்பர்களுக்கு முன்மொழிந்தோம். இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களுக்கு இதில் எந்தப் பிரச்னைகளும் இல்லை.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் இந்தியா மூன்றாவது இடத்திலும், ரஷ்யா நான்காவது இடத்திலும் உள்ளன. சீனா, அமெரிக்கா, இந்தியா மற்றும் ரஷ்யா ஆகியவையே முதல் நான்கு இடங்களில் உள்ள நாடுகளாகும். சீன அதிபர் ஜின்பிங் மற்றும் பிரதமர் மோடி ஆகிய இருவரும், எல்லைப் பிரச்னைகள் உட்பட, இரு நாடுகளுக்கும் பொதுவான நலன் சார்ந்த அனைத்துப் பிரச்னைகளையும் தீர்க்க முயன்று வருகின்றனர். இவ்வாறு அதிபர் புடின் கூறினார்.

# ஓமன் எண்ணெய் கிடங்கு அருகே ஈரான் ட்ரோன் தாக்குதல்; கச்சா எண்ணெய் ஏற்றுமதி நிறுத்தம்!

ஓமன், ஜூன். 05–

ஓமனில் எண்ணெய் கிடங்கு அருகே ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் ஏற்றுமதி தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்பட்டு உள்ளது.

மேற்காசிய நாடான ஈரான் – அமெரிக்கா இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமலில் இருந்தபோதிலும், நிரந்தர அமைதிக்காக நடந்து வரும் பேச்சில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. தற்போது ஓமனில் எண்ணெய் கிடங்கு அருகே ஈரான் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் ஏற்றுமதி தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்பட்டு உள்ளது.

ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து வளைகுடாப் பகுதிகளில்



பதற்றம் கடுமையாக அதிகரித்துள்ளது. சில தினங்களுக்கு முன் குவைத்தில் ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் குவைத் சர்வதேச விமான நிலையத்தின் வசதிகள் சேதமடைந்தன.

இதில் இந்தியர் ஒருவர் கொல்லப்பட்டார். 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். தற்போது ஓமனில் ஈரான் தாக்குதல் நடத்தி இருப்பது போர் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

# சிறப்பு பொதுக்குழு கூட்டம்!

பழனி, ஜூன் 05–

பழனி ஆதிஷ்தலங்குடி தமிழ் ஷத்திரிய குல நாடார்கள் (மடம்) சங்கம் 37/88 பழனி சிறப்பு பொதுக்குழு கூட்டம் அறிவிப்பு நமது சங்கத்தின் சிறப்பு பொதுக்குழு கூட்டம், வருகின்ற 27.06.2026 அன்று மதியம் 3 மணி அளவில் வேல் ரவுண்டானா அருகில் உள்ள எஸ்.ஆர்.பாண்டி பழ குடோனில் நடைபெற உள்ளது. அதில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். ஆகையால் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு முன்னாள் சங்க நிர்வாகிகள் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# மின்வாரிய தலைமை அலுவலகத்தில் திருடப்பட்ட 34 ஹார்டு டிஸ்க்குகள் பறிமுதல்!

சென்னை, ஜூன். 05–

தமிழக மின்சாரத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார், கடந்த சில நாட்களுக்கு முன்பு மின்துறை சார்ந்த ஆய்வில் ஈடுபட்டார். இந்நிலையில் கடந்த மாதம் மே 16, 17 ஆகிய தேதிகளில், மின்வாரிய தலைமை அலுவலகத்தில் குறைவான ஊழியர்கள் இருந்த சமயத்தில் சுமார் 10 ஹார்டு டிஸ்க்குகள் காணாமல் போனதாக புகார் எழுந்தது. அந்த ஹார்டு டிஸ்க்குகளில் நிலக்கரி கொள்முதல் டெண்டர் தொடர்பான தகவல்கள் இருந்ததாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக அதிகாரிகள் சிந்தாதிரிப்பேட்டை போலீஸ்




ஸ்டேஷனில் புகார் கொடுத்துள்ளனர். ஹார்டு டிஸ்குகள் திருடப்பட்டது தொடர்பாக மின்வாரியம் சார்பில் 8 புகார்கள் கொடுக்கப்பட்டு இருந்தன. மலர்விழி என்ற மின்வாரிய அதிகாரி கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்றது.

இதில், மின்வாரிய ஒப்பந்த ஊழியர் கோபிநாத் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான கோபிநாத்திடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். அவர் ஹார்டுடிஸ்க்குகளை பெங்களூருவுக்கு கொண்டு சென்று விற்பனை செய்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார், கோபிநாத்தை பெங்களூரு அழைத்து சென்று 34 ஹார்டு டிஸ்க்குகளை பறிமுதல் செய்துள்ளனர். மேலும், கோபிநாத்திடம் இருந்து ஹார்டு டிஸ்க்குகளை வாங்கிய நபரையும் சென்னைக்கு அழைத்து வந்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விஜய் மீண்டும் டெல்லி பயணம்!

சென்னை, ஜூன். 05–

நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல் அமைச்சர் விஜய், வருகிற 11–ந்தேதி மீண்டும் டெல்லி செல்ல இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு முதலமைச்சர் விஜய் கடந்த மாதம் 27–ந் தேதி டெல்லி சென்று வந்தார்.

அங்கு பிரதமர் மோடியை சந்தித்து, தமிழக நலன் குறித்து கோரிக்கைகளை முன்வைத்தார். கர்நாடக அரசு திட்டமிட்டுள்ள மேகதாது அணை திட்டத்துக்கு அனுமதிக்கக் கூடாது என்றும் தமிழக மீனவர்



பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அன்றைய தினம் டெல்லியில் நிதி மந்திரி நிர்மலா சீதாராமனையும் சந்தித்து பேசினார்.

இந்தப் பயணத்தின்போது தங்களது கூட்டணி கட்சியான காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சோனியா மற்றும் ராகுல் உள்ளிட்டோரை சந்தித்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் இந்த சந்திப்பை மேற்கொள்ளாமலேயே சென்னை திரும்பினார்.

இந்த நிலையில், மாநில முன்னேற்றத்திற்கு தேவையான வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து அனைத்து மாநில முதல்–மந்திரிகளுடன் டெல்லியில் வருகிற 11–ந்தேதி பிரதமர் மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் விஜய், வருகிற11–ந்தேதி மீண்டும் டெல்லி செல்ல இருக்கிறார். முதலமைச்சரின் இந்த பயணத்தின்போது அவர் காங்கிரஸ் தலைவர்களை சந்திக்க வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது.

# காங்., சார்பில் பிரவீன் சக்ரவர்த்தி போட்டி!

புதுடில்லி, ஜூன். 05–

தமிழகத்தில் காலியாக உள்ள ஒரு ராஜ்யசபா இடத்துக்கான தேர்தலில், காங்., சார்பில், பிரவீன் சக்ரவர்த்தி, 53, போட்டியிடுகிறார்.

தமிழகம், மஹாராஷ்டிரா, ஆந்திரா, குஜராத், ஜார்க்கண்ட், மத்திய பிரதேசம், மணிப்பூர் உட்பட நாடு முழுதும் காலியாக உள்ள, 26 ராஜ்யசபா இடங்களுக்கு வரும் 18ல் தேர்தல் நடக்கிறது. இதில், தமிழகம், மஹாராஷ்டிராவில் தலா ஒரு இடத்துக்கு இடைத் தேர்தல் நடக்கிறது. தமிழகத்தில், ராஜ்யசபா எம்.பி.,யாக இருந்த அ.தி.மு.க.,வின் சி.வி.சண்முகம், நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வென்றதால், எம்.பி., பதவி யை ராஜினாமா செய்தார். இந்த ஒரு இடத்துக்கு வரும் 18ல் தேர்தல் நடக்கிறது. முதல்வர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம், இந்த ஒரு இடத்தை கூட்டணி கட்சியான காங்கிரசுக்கு ஒதுக்கியது.



இந்நிலையில், தமிழகத்தில் காலியாக உள்ள ஒரு ராஜ்யசபா இடத்துக்கான தேர்தலில், காங்., வேட்பாளராக பிரவீன் சக்ரவர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளார். இவர், விரைவில் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார். இவர், போட்டியின்றி தேர்வாக வாய்ப்புள்ளது. இவர், 2028 வரை மட்டுமே எம்.பி.,யாக பதவி வகிப்பார்.

இதே போல், கர்நாடகாவில் இருந்து காங்., தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பவன் கெரா, மன்சூர் அலி கான்; மத்திய பிரதேசத்தில் இருந்து மீனாட்சி நடராஜன்; ராஜஸ்தானில் இருந்து நீரஜ் டங்கி; ஜார்க்கண்டில் இருந்து பிரணவ் ஜா ஆகியோர், காங்., சார்பில் ராஜ்யசபா வேட்பாளர்களாக களமிறக்கப்பட்டுள்ளனர்.

# அறிவிப்பு பலகையில் கட்டண விபரம்: எதிர்த்து தனியார் பள்ளிகள் வழக்கு!

சென்னை, ஜூன். 05–

கல்வி கட்டணங்களை, பள்ளி அறிவிப்பு பலகைகளில் வெளியிட வேண்டும் என, தனியார் பள்ளிகளுக்கு மாநில தகவல் ஆணையம், தனியார் பள்ளிகள் இயக்குநரகம் ஆகியவை பிறப்பித்த உத்தரவுகளை ரத்து செய்யக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

அகில இந்திய தனியார் கல்வி நிறுவனங்கள் சங்கத்தின் பொதுச்செயலர் கே.பழனியப்பன் தாக்கல் செய்த மனு:

தமிழகம் முழுதும் உள்ள அனைத்து தனியார் பள்ளிகளும், அரசு நிர்ணயித்த கல்வி கட்டண விபரங்களை, பள்ளி விளம்பர பலகைகளில் வெளியிடுவதை கட்டாயமாக்கும்படி, தனியார் பள்ளிகள் இயக்குநருக்கு, மாநில



தகவல் ஆணையம், மே 25ம் தேதி உத்தரவிட்டுள்ளது.

சட்ட வரம்பு அதன்படி, ஜூன் 5ம் தேதிக்குள் கட்டண விபரங்களை, விளம்பர பலகையில் வெளியிடும்படி, அனைத்து தனியார் பள்ளிகளுக்கு, தனியார் பள்ளிகள் துறை இயக்குநர் ஜூன் 1ம் தேதி சுற்றறிக்கை வெளியிட்டார்.

தகவல் அறியும் உரிமை சட்டம், தனியார் சுயநிதி கல்வி நிறுவனங்களுக்கு பொருந்துமா என்பது ஆராயப்படவில்லை.

தகவல் அறியும் சட்டத்தின் வரம்புக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்போது, ஆணையம் பிறப்பித்த உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல.

வெளிப்படையான சட்டப்பூர்வ விதிமுறை இல்லாத நிலையில், தனியார் சுயநிதி பள்ளிகளின் கட்டண கட்டமைப்பை வெளியிடுமாறு கட்டாயப்படுத்த, தனியார் பள்ளிகள் இயக்குநருக்கு சட்டப்பூர்வ அதிகாரம் இல்லை. விசாரணை மத்திய அரசின் சி.பி.எஸ்.இ., – ஐ.சி.எஸ்.இ., வாரிய அங்கீகாரம் பெற்ற பள்ளிகள், மாநில பள்ளிக் கல்வித் துறையின் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டவையா என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

முன் அறிவிப்போ, விசாரணையோ இல்லாமல், நான்கு நாட்களுக்குள் ஆணையத்தின் உத்தரவை அமல்படுத்த வேண்டும் என்பது, இயற்கை நீதிக்கு முரணானது. மாநில தகவல் ஆணையம் பிறப்பித்த உத்தரவு அதிகார வரம்பு மீறல் என்பதால், அந்த உத்தரவையும், அதன் அடிப்படையில் தனியார் பள்ளிகள் இயக்குநர் பிறப்பித்த சுற்றறிக்கையையும் ரத்து செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தென்மேற்கு பருவமழை தீவிரம்: கனமழை எச்சரிக்கை!

சென்னை, ஜூன். 05–

கேரளம் மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான காலக்கட்டத்தில் பெய்யும். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 1–ந்தேதி தென்மேற்கு பருவமழை தொடங்கும். எப்போதாவது முன்னதாகவோ அல்லது காலதாமதமாகவோ தொடங்கக்கூடும்.

கடந்த ஆண்டு ஒரு வாரத்துக்கு முன்னதாக மே 24–ந்தேதியே தென்மேற்கு பருவமழை தொடங்கியது. அதேபோன்று இந்த ஆண்டும் தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே, அதாவது மே 26–ந்தேதி தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

ஆனால் கூறியபடி தென்மேற்கு பருவமழை தொடங்கவில்லை. வழக்கத்தைவிட 4 நாட்கள் தாமதமாக நேற்று தொடங்கியது. அதே நேரத்தில் பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே பல மாவட்டங்களில் மழை பெய்து வந்தது.

இந்த நிலையில் பருவமழை தொடங்கியதையடுத்து பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்ய தொடங்கியிருக்கிறது. ஒரு சில மாவட்டங்களில் அவ்வப்போது கனமழை கொட்டி வருகிறது.

தென்மேற்கு பருவமழை தொடங்கியதன் காரணமாக மாநிலம் முழுவதும் வருகிற 10–ந்தேதி வரை



கனமழை தொடரும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ள மாவட்டங்களுக்கு ஆரஞ்சு மற்றும் மஞ்சள் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

பருவமழை தொடங்கிய முதல்நாளான நேற்று, வயநாடு, பாலக்காடு உள்ளிட்ட 8 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையும், திருவனந்தபுரம் உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. அதன்படி அந்த மாவட்டங்களில் நேற்று பலத்த மழை பெய்தது.

இன்றைய தினம் பத்தினம்திட்டா, கோட்டயம், இடுக்கி, எர்ணாகுளம், திருச்சூர், காசர்கோடு, கண்ணூர், கோழிக்கோடு, வயநாடு, பாலக்காடு, மலப்புரம் ஆகிய 11 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையும், திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா ஆகிய 3 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருக்கிறது.

நாளை(7–ந்தேதி) கண்ணூர், காசர்கோடு, கோழிக்கோடு, வயநாடு, பாலக்காடு, மலப்புரம் திருச்சூர் ஆகிய 7 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கையும், திருவனந்தபுரம், கொல்லம், பத்தினம்திட்டா, ஆலப்புழா, இடுக்கி, கோட்டயம், எர்ணாகுளம் ஆகிய 7 மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் ஆறுகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும், மலைப் பகுதிகளில் நிலச்சரிவு, மண் சரிவு மற்றும் சேற்று தழுவல்கள் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கப்பட்டு இருக்கிறது.

இதனால் பலத்த மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ள மாவட்டங்களை சேர்ந்த மக்கள் எச்சரிக்கையுடனும், கவனமுடனும் இருக்குமாறு இந்திய வானிலை மையம் கேட்டுக் கொண்டு உள்ளது. அது மட்டுமின்றி மாநிலம் முழுவதும் 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும், கடல் மற்றும் கடற்கரை பகுதிகளில் அதைவிட வேகமாக காற்று வீசும் என்றும் தெரிவித்துள்ள இந்திய வானிலை ஆய்வு மையம், கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அறிவுறுத்தி உள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020